ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/48 - 2024 ජූලි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.07.25

*2394/48 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம்**

6 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சராகிய நிமல் சிறிபால டி சில்வா ஆகிய நான், இந்த கட்டளையின் மூலம் 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய 1797/ 27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை, கீழுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு திருத்துகிறேன் :-

**அட்டவணை**

(1) அதன் சிங்கள மொழியில் உள்ள கட்டளையின் தலைப்பு மற்றும் முதலாவது பந்தியில் உள்ள "கட்டளை" மற்றும் "கட்டளையினால்" என்ற சொற்களுக்கு முறையே "ஒழுங்குவிதி" மற்றும் "ஒழுங்குவிதிப்படி" என்ற சொற்களை பதிலீடு செய்வதன் மூலமும்,

(2) மேற்கூறிய திருத்தப்பட்ட கட்டளையின் முதலாவது அட்டவணையில் 3 ஆம் இலக்கத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட கட்டளை மற்றும் நிபந்தனையை பின்வரும் நிபந்தனையினால் சட்ட நீக்கம் செய்வதன் மூலமும்,



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*"3. நியதிச்சட்ட சேவை வழங்குநரினால் அரசு சார்பாக ஏற்கப்படும் அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் அனைத்தையும் வான் போக்குவரத்துத் தொழிற்துறையின் அபிவிருத்திக்கு ஏற்றவகையில் சிறந்த முறையில் பேண வேண்டும் என்பதுடன், அத்தகைய அசையாச் சொத்தை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி ஒரு மூன்றாம் தரப்பினருக்குக் குத்தகைக்கு வழங்கவும் கூடாது."*

**நிமல் சிறிபால டி சில்வா** (பா. உ.),
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும்
விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி.*

EOG *07-0241*